**தலவாக்கலை லிந்துல நகர சபை - 2024**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலவாக்கலை லிந்துல நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலவாக்கலை லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள்

மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் தொகுக்கப்பட்ட அறிக்கையின்ந்த முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுகள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,525,120 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு கழிவுப்பொருள் எரியூட்டி கொள்வனவு மீளாய்வாண்டு தவறுதலாக கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெற வேண்டிய தொகை மற்றும் ஆயுர்வேத மருந்து பொருட்கள் மானியம் பெறுவனவு மொத்தம் ரூபா 5,356,780 தொகை மூலதன வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மூலதன ஈடுபாட்டுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கில் செலவு வைக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 4,162,755 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப் படும் போது மூலதன ஈடுபாட்டிற்கு வருமான பங்களிப்பு கணக்கில் வைக்கப்பட வேண்டிய போதிலும் தவறுதலாக திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் மொத்தம் ரூபா 1,108,581 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் நூலக புத்தகங்கள் கொள்வனவு சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு காசு செலவு வைத்தல் மாத்திரம் இடம் பெற்று இருந்த போதும் மூலதன செலவினம் வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபாட்டுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 03 விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 33,326,185 ஆன நிர்மாண கடன் கொடுத்தோர் பதிவேடு, நிர்மான கடன்பட்டோர் பதிவேடு, முற்பண பதிவேடு என்பன சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்பபடுத்த முடியாது இருந்தது. | .சரியான பதிவேடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் வகையில் உரிய பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டம்** | | | |
| 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை VI ஆம் பகுதியின் 83.1 ஆம் பந்தி | 2018 – 2022 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 47 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | குடியிருப்பிற்காக பயன்படுத்துகின்ற கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ்களை வழங்க வேண்டும். |
| **(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி 571(3) | 2014 ஆம் ஆண்டு முதல் 2022 வரையான காலப் பகுதியில் வைப்புச் செய்யப்பட்ட காலா வதியான ரூபா 6,899,244 ஆன 49 வைப்புக்களை | வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்களை தீர்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்வு செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்பட வில்லை. | | |
| **(இ) 1987 இன் 18 ஆம் இலக்க நகர சபை சட்டத்தின் (255 வது அதிகாரம்)**<br>72(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் வெளிப்படுத்தப்பட்டு இருந்த 48 அத்துமீறிய நிறுவனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | அத்துமீறிய நிர்மாணங்களை இடைநிறுத்துமாறும் நிர்மாணங்களை சட்டரீதியாக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 9,601,059 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 863,691ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,480,000 | 7,195,606 | 7,625,814 | 4,238,567 | 6,460,000 | 6,177,380 | 5,267,314 | 4,668,775 |
| (ii) | வாடகை | 7,104,000 | 8,909,279 | 10,858,768 | 4,687,577 | 7,733,500 | 11,042,794 | 10,869,206 | 6,637,066 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,328,500 | 1,461,000 | 1,461,000 | - | 1,676,000 | 1,077,000 | 1,077,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,003,500 | 27,873,927 | 26,260,801 | 8,779,018 | 5,962,600 | 5,055,918 | 3,970,008 | 7,165,892 |
| | | 36,916,000 | 45,439,812 | 46,206,383 | 17,705,162 | 21,832,100 | 23,353,092== | 21,183,528 | 18,471,733 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 4,238,567 ஆக இருந்ததுடன், அதில் ஒரு அலகிலிருந்து ரூபா 5,000 ஐ மிகைத்த 218 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 3,110,555 தொகையும் 1987 இன் 18 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பம் திகதியில் உள்ளவாறு ரூபா 3,788,963 வாடிவீட்டு வாடகை மீதி ஒன்று காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 2,988,963 ஆன நிலுவை காணப்பட்டமையால் நிலுவை அளவீடு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அளவிடப்பட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மொத்தம் ரூபா 477,000 ஆன வாரச்சந்தை கட்டணங்கள் அளவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அளவிடப்பட வேண்டும். |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 4,300,159 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,250,760 ஆக இருந்தது. | அட்டவணைகளை சமர்ப்பித்து கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதாக | நிலுவை தொகைவிரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீலாபாண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 16,906,650 ஆன 10 அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டு இறுதி வரையில் அதற்கான நிதி ஏற்பாடுகள் கிடைக்கவில்லை என்பதாக. | தேவைப்பாடு இனங்காணப்பட்டு மற்றும் நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டு செயற் திட்டங்களை திட்டமிடுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா .1,080,708 ஆக இருந்தது. அதில் 05 இற்கு வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 979,289 ஆக இருந்தது. | நிலுவை வருமான்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளின் போது நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிதி பிரமாணம் 104 (4) பரிசோதனைகள் 04 மூலம் இனங்காணப்பட்டு இருந்த மொத்தம் ரூபா 3,065,427 ஆன நட்டங்கள் பரிசோதனை அறிக்கைகள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து 1 ½ ஆண்டிற்கு 4 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. | பரிசோதனை அறிக்கைகளின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு அறவிடப்பட வேண்டும். |
| (இ) | தலவாக்கலை வனிகசேகர இடத்தில் நாளாந்த வாரச்சந்தை 10 ஆண்டுகளுக்கான குத்தகை வழங்கப்பட்ட காலம் 2024 ஒக்டோபர் 01 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதும் நகர சபைக்கு அந்தக் கட்டிடத்தை மீளப் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வினோத படகு சேவை ஒன்றை நடத்திச் செல்வதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 761,900 தொகை செலவிடப்பட்டு படகுகள் கொள்வனவு செய்யப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்த போதும் உரிய செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | படகுகளை வேறு நிறுவனத்திற்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | செயற்படுத்தாமல் இருப்பதற்குரிய விடயங்களை கண்டுபிடித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பொதுக் களஞ்சிய பதிவேட்டில் 60 களஞ்சிய பொருட்களுக்கு உரிய பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதியினைப் பெற்றுக் கொண்டு பின்னர் கணக்கீடு செய்வதாக. | குறித்த பொருட்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | ரூபா 607,345 ஆன மறுக்கப்பட்ட காசோலைகள் மற்றும் ஓய்வூதிய சம்பள முற்பணம் ரூபா 55,020 தொகைகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மீதி உறுதிப்படுத்தப்பட்டு வர விடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்தம் ரூபா 14,670,000 ஆன 04 வாகனங்கள் 1 ஆண்டிற்கும் 7 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றோ அல்லது குறை பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | .திருத்தம் செய்வதற்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக. | சொத்துக்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தப்படும் 02 வாகனங்களின் உரித்தினை உரித்து கைஏற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | சொத்துக்களின் உரித்தையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயலாளர் நூலகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உதவியாளர், முன்பள்ளி காப்பாளர், காவலாளிகள், பொது சுகாதார பரிசோதகர், சுகாதார காப்பாளர், ஆயர்வேத மருந்து கலப்பவர், பெக்கோ இயந்திர | வெற்றிடங்களை நிரப்புமாறு பிரதான செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு உள்ளதாக. | வெற்றிடங்களை பூரணப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாட்டாளர், வருமான பரிசோதகர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், சுகாதார தொழிலாளிகள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் உட்பட 14 பதவிகளில் 25 வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் சபையில் செயலாற்றல் மற்றும் பொது மக்கள் சேவைகளை நிறைவேற்றும் இயலுமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற 2 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 886,668 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கடன் மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |